



புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






சனி ❖ ஏப்ரல். 22, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 197 ❖ ரூ.10


சட்டமன்றம், மக்களவை தேர்தலில் விதிக்கப்படாத நிபந்தனைகள், அதிமுக பொதுச் செயலாளர் தேர்தலில்

# விதிக்கப்பட்டது

## கர்நாடகா சட்டசபை தேர்தலில் அதிமுக சார்பில் புலிகேசி தொகுதியில் எடப்பாடி வேட்பாளர் காந்திநகர் தொகுதியில் ஓபிஎஸ் வேட்பாளர் போட்டி: தேர்தல் ஆணையம் அறிவிப்பு








சென்னை, ஏப். 22-

சட்டமன்றம், மக்களவை தேர்தலில் விதிக்கப்படாத நிபந்தனைகள், அதிமுக பொதுச் செயலாளர் தேர்தலில் விதிக்கப்பட்டது என்று ஓபிஎஸ் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வாதிடப்பட்டுள்ளது.

அதிமுக பொதுக்குழு தீர்மானங்கள், பொதுச்செயலாளர் தேர்தல் தொடர்பாக, ஓ.பன்னீர்செல்வம், மனோஜ்பாண்டியன், வைத்திலிங்கம், ஜேசிடி. பிரபாகர் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுக்கள் மீதான இறுதி விசாரணை, நீதிபதிகள் மகாதேவன் மற்றும் முகமது சபிக் அமர்வில் நேற்று இரண்டாவது நாளாக நடந்தது.

அப்போது பன்னீர்செல்வம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், குரு கிருஷ்ணகுமார், "கட்சியின் திருத்த விதிகளுக்கும், ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் தேர்தலுக்கும் பொதுக்குழுவில் ஒப்புதல் பெற வேண்டும் என கட்சியின் சட்ட திட்ட விதிகளில் குறிப்பிடவில்லை. 2021 டிசம்பரில் நடந்த செயற்குழு தீர்மானங்களுக்கு ஒப்புதல் பெறும் தீர்மானங்கள் ஏதும் 2022 ஜுன் 23 பொதுக்குழுவில் முன் வைக்கப்படவில்லை. மாறாக புதிய நிர்வாகிகளின் தேர்தல், நியமனத்தை பதிவு செய்து, பாராட்டு தெரிவிக்கும் வகையிலேயே தீர்மானங்கள் வைக்கப்பட இருந்தன. அந்த தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டதால் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் காலாவதியாகி விட்டதாக எப்படி கூற முடியும்?.

இதைக் கருத்தில் கொள்ளாமல் தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். சட்டமன்றம், மக்களவை தேர்தலில் விதிக்கப்படாத நிபந்தனைகள், அதிமுக பொதுச்செயலாளர் தேர்தலில் விதிக்கப்பட்டது. 75 மாவட்டச் செயலாளர்கள் மட்டுமே கட்சியில் உள்ளனர். இதில் பொதுச்செயலாளர் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்ய 10 மாவட்டச் செயலாளர் முன்மொழிய வேண்டும். 10 மாவட்ட செயலாளர்கள் வழிமொழிய வேண்டும் என நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன" என்று வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், இந்த நிபந்தனைகள் முன்பிருந்தே பின்பற்றப்படுகிறதா என கேள்வி எழுப்பினர். அதற்கு, இல்லை என பதிலளித்த பன்னீர்செல்வம் தரப்பு வழக்கறிஞர், "தற்போது தான் இந்த நிபந்தனைகள், சொந்த நலனுக்காக கொண்டு வரப்பட்டுள்ளது. உள்கட்சி ஜனநாயகத்துக்கு விரோதமாக பொதுச்செயலாளர் தேர்தலில் போட்டியிட தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டது. கட்சியில் பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு இல்லை எனும்போது எதேனும் உயர்ந்த பதவிக்கு ஓய்வுபெற்ற நீதிபதி மூலம் தேர்தல் நடத்தினால், யாருக்கு ஆதரவு இல்லை என்பது தெரியும்" என்று வாதிட்டார்.

பன்னீர்செல்வம் தரப்பு வாதங்கள் முடிவடைந்த நிலையில், வழக்கின் விசாரணையை திங்கள்கிழமைக்கு தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**கர்நாடக சட்டசபை தேர்தலில் காந்திநகர் தொகுதியில் ஓபிஎஸ் தரப்பு வேட்பாளர் குமார் தாக்கல் செய்த மனுவை அதிமுக பெயரில் தேர்தல் ஆணையம் ஏற்றுள்ளது. அதை போல் அ.தி.மு.க. சார்பில் பழனிசாமியால் அறிவிக்கப்பட்ட புலிகேசி நகர் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் அன்பரசனின் வேட்புமனுவும் ஏற்கப்பட்டுள்ளது.**




## கள்ளக்குறிச்சி அருகே ஒரு பெண், இரண்டு குழந்தைகள் கொலை செய்த வழக்கில் கொலையாளிகளை அதிரடியாக கைது செய்த கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை

கள்ளக்குறிச்சி, ஏப்,22_

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நரிமேடு பகுதியில் கடந்த 19-ம் தேதி தனியாக உள்ள வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக கிடைத்த தகவலின் பேரில் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை செய்தபோது அந்த வீட்டில் வசித்து வந்த வளர்மதி அவரது 11 வயது மகன் மற்றும் 10 மாத குழந்தை ஆகிய மூவரும் கழுத்து அறுத்து கொலை செய்யப்பட்டு கிடந்தனர்.


கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .மோகன்ராஜ் சம்பவ இடத்தில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஜவஹர்லால் தலைமையில் 7 தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை விரைவாக கைது செய்ய உத்தரவிட்டார். அதன்படி தனிப்படையினர் தீவிரமாக கொலை நடந்த பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தும், சந்தேகப்படும் நபர்களை வைத்தும் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

காவல்துறையினரின் கிடுக்குப்பிடி விசாரணையில், கொலை செய்யப்பட்ட வளர்மதியின் சித்தி உறவு முறையான அஞ்சலை (எ) விமலா என்வருக்கும் வளர்மதிக்கும் இடையோ வீட்டுமனை மற்றும் பணம் கொடுக்கல் வாங்கள் தொடர்பாக பிரச்சனை இருந்து வந்துள்ளது. இந்த விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு உளுந்தூர்பேட்டை அருகே உள்ள செங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த பெருமாள் அஞ்சலை (எ) விமலா (50) /, என்பவர் பாசார் கிரமத்தை சேர்ந்த சுப்புரமணியன் மகன்கள் தமிழ்செல்வன் (27), பூபாலன் (30), சின்னப்பன் மகன் சிவா (39) மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், கடலங்குடியைச் சேர்ந்த நாகராஜன் மகன் ராமு (24) ஆகியோருடன் சேர்ந்து கூட்டுச் சதித் திட்டம் தீட்டி கடந்த 17-ம் தேதி இரவு வளர்மதியின் வீட்டிற்கு சென்று பூபாலன் மற்றும் சிவா ஆகியோர் வீட்டின் வெளியே நின்று ஆள் நடமாட்டத்தை கவனித்துக் கொண்டும் அஞ்சலை, கையில் கத்தியுடன் இருந்த தமிழ்செல்வன் மற்றும் ராமு ஆகியோர் வளர்மதியின் வீட்டிற்குள் புகுந்து வளர்மதியின் முதுகில் கத்தியால் குத்தியும் கழுத்தை அறுத்தும் வீட்டில் தூங்கி கொண்டிருந்த வளர்மதியின் குழந்தைகளை கழுத்தை அறுத்து கொலை செய்துவிட்டு அங்கு இருந்த தடயங்களை அழித்துவிட்டு தப்பி ஓடியது தெரியவரவே மேற்படி 5 நபர்களையும் தனிப்படையினர் அதிரடியாக கைது செய்தனர்.

கள்ளக்குறிச்சி பகுதியில் ஒரு பெண் மற்றும் 2 குழந்தைகள் உட்பட 3 பேர் கழுத்து அறுத்து கொலை செய்யப்பட்ட வழக்கில், சிறப்பாக புலன் விசாரணை செய்து விரைவாக எதிரிகளை கைது செய்த தனிப்படையினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மோகன்ராஜ் வெகுவாக பாராட்டினார்.






## வாழ்த்து

இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் மற்றும் புதுகை வரலாறு வாசகர்கள், விளம்பரதாரர் அனைவருக்கும் ஈதுல் ஃபித்ரு நோன்பு பெருநாள் நல்வாழ்த்துக்கள்

நிர்வாகி

### வெயிலுக்கு ரெஸ்ட்

## தமிழ்நாட்டில் 5 நாட்களுக்கு மழை வெளுக்கப்போகுது... வானிலை அலெர்ட்

சென்னை , ஏப்,22_

5 நாட்களுக்கு தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, தமிழ்நாட்டில் இன்று ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏப்ரல் 22 ஆம் தேதியில் தமிழ்நாட்டில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, ஏப்ரல் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏப்ரல் 25 ஆம் தேதியில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொருத்தவரை, அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 38-39 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நம்மை நாம்
கேள்வி கேட்காதவரை..
நம் தவறுகளை
நாம் உணரபோவதில்லை...

புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,650 | Rs. 6,097 |


# எதிர்க்கட்சித் தலைவர் உரையை நேரலை செய்யாததால் சட்டப்பேரவையிலிருந்து அதிமுக வெளிநடப்பு செய்தனர்

சென்னை , ஏப்.22-

எதிர்க்கட்சி தலைவர் உரையை நேரலை செய்யாத காரணத்தால், காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலினின் பதிலுரையின் போது அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.



தமிழக சட்டப்பேரவையில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. கூட்டத் தொடரில் காவல் துறை மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெற்று வருகிறது. இதன்படி, காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, ஆருத்ரா நிறுவன மோசடி, வேங்கைவயல், பல்வீர் சிங் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து, காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில் அளித்து பேசத்தொடங்கினார். முதல்வர் பதிலுரையின் போது அதிமுக உறுப்பினர்கள் அமலியில் ஈடுபட்டனர். அப்போது, அதிமுகவினருக்கு திமுகவினர் எதிர்ப்பு தெரிவித்ததால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். எதிர்க்கட்சி தலைவர் உரையை நேரலை செய்யாத காரணத்தால் வெளிநடப்பு செய்ததாக அதிமுக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

# உளுந்தூர்பேட்டை அருகே மூன்று வயது குழந்தை விவசாய கிணற்றில் விழுந்து பலி

கள்ளக்குறிச்சி, ஏப்,22_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள வடமாம்பாக்கம் கிராமத்தில் மூன்று வயது குழந்தை விவசாய கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது, இத்தகவலறிந்த திருநாவலூர் காவல்துறையினர் மற்றும் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று குழந்தையின் சடலத்தை மீட்டு உடற்கூறு ஆய்விற்காக கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



இதனைத் தொடர்ந்து இச்சம்பவம் குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்ட பொழுது சங்கராபுரம் தாலுக்கா தேனூர் கிராமத்தை சேர்ந்த ஏழுமலை கிருஷ்ணவேணி தம்பதிகளின் குழந்தை அய்யனார் (வயது 3), இவர்கள் சென்னையில் கூலி வேலை செய்து வருகிறார்கள், இந்தநிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கிருஷ்ணவேணி தனது குழந்தை அய்யனாரை வடமாம்பாக்கத்தில் உள்ள பாட்டி ஜானகி வீட்டில் விட்டுவிட்டு சென்றுள்ளார்,

இந்த நிலையில் நேற்று பாட்டி ஜானகி குழந்தை அய்யனாரை அழைத்துக் கொண்டு விவசாய நிலத்தில் மரத்தடியில் தூங்க வைத்துவிட்டு வேர்க்கடலை அறுவடை செய்து வந்த நிலையில் திடீரென குழந்தை அருகில் இருந்த விவசாய கிணற்றில் விழுந்தது கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார், உடனே பக்கத்தில் விவசாய வேலை செய்து கொண்டிருந்தவர்கள் காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது, இத்தகவலறிந்த திருநாவலூர் காவல்துறையினர் மற்றும்தீயணைப்புதுறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று குழந்தையின் சடலத்தை மீட்டு உடற்கூறு ஆய்விற்காக கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437



மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகில் உள்ள கண்ணன் தியேட்டரில் எதிர்புறம் அம்மையார் அம்மன் திருமண மஹால் திறப்பு விழா நடந்தது, புதிய கட்டிடத்தின் திறப்பு விழா 10வது வார்டு கவுன்சிலர் உசிலை செல்வி தலைமையில் நடந்தது. நிகழ்ச்சியில் சீமானூத்து ஊராட்சி மன்றத் தலைவர் டாக்டர். அஜித் பாண்டி, கட்சி பிரமுகர்கள், உறவினர்கள், தொழிலதிபர்கள், எஸ். கே. கன்ஸ்ரக்சன் வைர பாண்டி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஆப்பிள் ஸ்டோரில் திருடர்கள் கைவரிசை ரூ.4.10 கோடி மதிப்பிலான 436 ஐபோன்கள் திருட்டு

சியாட்டில் , ஏப்.22-

அமெரிக்க நாட்டின் சியாட்டில் பகுதியில் அமைந்துள்ள ஆப்பிள் ஸ்டோரில் சினிமா பாணியில் சுவற்றில் துளையிட்டு நுழைந்து கைவரிசையை காட்டியுள்ளனர். இந்திய மதிப்பில் ரூ.4.10 கோடி மதிப்புள்ள 436 ஐபோன்களை அவர்கள் திருடிச் சென்றுள்ளனர். இதனை அந்நாட்டின் உள்ளூர் செய்தி நிறுவனம் ஒன்று உறுதி செய்துள்ளது.

சியாட்டில் பகுதியில் உள்ள ஆப்பிள் ஸ்டோருக்கு பக்கத்தில் அமைந்துள்ள 'சியாட்டில் காபி கியர்' காபி கடையின் கதவை உடைத்து அதன் பாத்ரூம் சுவற்றை துளையிட்டு ஆப்பிள் ஸ்டோருக்கு திருடர்கள் சென்றுள்ளனர். இது குறித்து காபி கடையின் சிஇஓ ட்விட்டர் பதிவு ஒன்றையும் பதிவிட்டுள்ளார். அதில் 2 பேர் இதை செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் வணிக வளாகத்தின் கட்டிட வரைபட அணுகல் இருப்பவர்கள் மட்டுமே இதை செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காபி கடை மற்றும் ஆப்பிள் ஸ்டோர் அமைந்துள்ள ஆல்டர்வுட் மாலில் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருவதாக தெரிகிறது. வழக்கமாக திருடர்கள் நகை, பணம் மற்றும் வங்கியில் கொள்ளை அடிப்பார்கள். ஆப்பிள் ஸ்டோரில் அவர்கள் கைவரிசை காட்டி இருப்பது ஆப்பிள் நிறுவன தயாரிப்புக்கு கள்ள சந்தையில் உள்ள டிமாண்டை வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளது.

இந்தியா உட்பட உலகம் முழுவதும் சுமார் 25 நாடுகளில் ஆப்பிள் நிறுவனம் 552 ஆப்பிள் ஸ்டோர்கள் இயங்கி வருகின்றன. இதில் இந்தியாவில் மும்பை மற்றும் டெல்லியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தான் ஆப்பிள் ஸ்டோர் திறக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பூஞ்ச் தாக்குதலில் உயிரிழந்த வீரர்களின் பெயர்களை வெளியிட்டது ராணுவம்

பூஞ்ச் , ஏப்.22-

ஜம்மு-காஷ்மீரில்ராணுவ வீரர்கள் சென்ற வாகனத்தின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 5 வீரர்களின் அடையாளங்களை ராணுவம் அறிவித்துள்ளது.




உயிரிழந்த வீரர்கள் ஹவில்தார் மன்தீப் சிங், லேன்ஸ் நாயக் தெபாசிஷ் பஸ்வால், லேன்ஸ் நாயக் குல்வந்த் சிங், சிப்பாய் ஹர்கிருஷ்ணன் சிங், சிப்பாய் சேவாக் சிங் என்ற அடையாளம் தெரியவந்துள்ளது. இவர்கள் ராணுவத்தின் ராஷ்ட்ரீய ரைஃபில்ஸ் படைப் பிரிவின் 16வது கார்ப்பைச் சேர்ந்தவர்களாவர். நக்ரோடாவில் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில், இவர்கள் சென்ற வாகனத்தின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து பேர் உயிரிழந்தனர். ஒருவர் சிகிச்சையில் உள்ளார். வீரர்களின் மறைவுக்கு ராணுவத்தினர், பொதுமக்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக இந்திய ராணுவத்தில் 16வது கார்ப்ஸின் அதிகாரபூர்வ ட்விட்டர் பக்கமான ஒயிட்நைட் கார்ப்ஸில், "உயிரிழந்த ராணுவ வீரர்களுக்கு வீரவணக்கம். அவர்களின் குடும்பத்தினருடன் நாங்கள் தோளாடு தோளாடு நிற்கிறோம் " என்று தெரிவித்துள்ளது.



புதுக்கோட்டைவழியாக வைதீஸ்வரன் கோவிலுக்கு வழிபாட்டுக்கு செல்லும் பக்தர்களுக்குபுதுகைநகர மக்கள் நகரத்தார்கள் உள்ளிட்டவர்கள் குடும்பத்துடன் பிருந்தாவனம்,மச்சுவாடி ,தஞ்சை சாலைவரையில் வரவேற்பு அளித்தும் . மேலும் அவர்களுக்கு உணவுகள் பிஸ்கெட், பால் ,பழங்கள், ஐஸ் கீரிம், தண்ணீர் வழங்கி மகிழ்ச்சியுடன் வழியனுப்பினர்.

# காரைக்குடி ஸ்ரீ ராஜ ராஜன் பொறியியல் கல்லூரியில் சர்வதேச கருத்தரங்கம் நடைபெற்றது

காரைக்குடி, ஏப்.22-

ஸ்ரீராஜ ராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறை, மின் மற்றும் மின்னணு பொறியியல் துறையும் இணைந்து சர்வதேச கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியலில் வளர்ந்து வரும் போக்குகள் என்ற தலைப்பில் பல்வேறு கல்லூரியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் மற்றும் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி அறிஞர்கள் என்று பலர் கலந்து கொண்டனர்.



விழாவில் அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் சுப்பையா தலைமை ஏற்று தலைமையுரையாற்றினார், இவ்விழாவில் கல்லூரி முதல்வர் இளங்கோ வரவேற்புரையாற்றினார், மேலும் விழாவில் அண்ணா பல்கலைக்கழக இராமநாதபுரம் வளாகம் மின்னணுவியல் மற்றும் தகவல்தொடர்புபொறியியலின் துறைத்தலைவர் சொர்ணகீர்த்தி சிறப்பு விருந்தினராககலந்துகொண்டு சிறப்புரையாற்றினார், மற்றொரு சிறப்பு விருந்தினராக மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் பேராசிரியர் முகமது மன்சூர் ரூமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

விழாவில் மின்னியல் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறையின் நினைவு புத்தகம் வெளியிடப்பட்டது, சர்வதேச கருத்தரங்கின் தலைப்பை பற்றி மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியலின் துறைத்தலைவர் இஸபெல்லா ராணி எடுத்துரைத்தார்,சென்னை எஸ். ஆர். எம் பல்கலைக்கழகத்தின் மின் மற்றும்மின்னணு பொறியியல் துறையின் பேராசிரியர் சுப்பிரமணி, துபாய் கர்ட்டின் பல்கலைக்கழகத்திலிருந்து இயக்குனர் பேராசிரியர் சித்திரை பொன்செல்வன் காணொளி வழியாக மாணவர்களுக்கு மின்னணு பொறியியல், தகவல் தொடர்பு பொறியியல் பற்றியும் எடுத்துரைத்தனர்.

விழாவில் கல்லூரி ஒருங்கிணைப்பாளர் வடிவாம்பாள் மற்றும் மெக்கானிக்கல் துறையின் பேராசிரியர் ஆண்ட்ரீவ் மற்றும் பல துறையைச் சார்ந்த பேராசிரியர்களும் மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டனர். ஸ்ரீ ராஜ ராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் மின் மற்றும் மின்னணு பொறியியல் துறையின் பேராசிரியர் மினர்வாதேவி நன்றியுரையாற்றினார்.

# 4 நாள் வேலை, 3 நாள் ஓய்வு... 12 மணி நேர வேலை மசோதா யாருக்கெல்லாம் பொருந்தும்? அமைச்சர் விளக்கம்

சென்னை , ஏப்.22-

"மின்னணுவியல் துறை, தோல் அல்லாத காலணிகள் உற்பத்தி, மென்பொருள் துறையில் பணியாற்றக் கூடியவர்களுக்கு 12 மணி நேர வேலை மசோதா பொருந்தும் வாய்ப்புள்ளது" என்று தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை வளாகத்தில் தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், தொழிலாளர் வேலை நேர மசோதா குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "இப்போது கொண்டு வந்திருக்கின்ற 65-ஏ சட்டத் திருத்தம் என்பது, பொதுவாக இன்றைக்கு இருக்கக்கூடிய உலகளாவிய சூழ்நிலையில் புதிய முதலீடுகள் இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் வருகின்றபோது, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டிற்கு வரக்கூடிய நிறுவனங்கள் நம்முடையை வேலை நேரத்தில் ஒரு நெகிழ்வுத்தன்மை (flexibility) இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. இந்த நெகிழ்வுத்தன்மையின் மூலமாக புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

குறிப்பாக, பெண்களுக்கு அதிகமாக வேலைவாய்ப்புகள் உருவாகக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. இதுபோன்ற நெகிழ்வுத்தன்மையை எந்தெந்த நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன என்று பார்த்தால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கூறியதைப் போல, அனைத்து நிறுவனங்களுக்கும் இது பொருத்தமானது அல்ல. குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கு மட்டுமே இந்த விதிகள் பொருந்தக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறது.



உதாரணமாக, மின்னணுவியல் துறையில் (Electronics Industries) இருக்கக்கூடிய நிறுவனங்கள், Non leather shoe making என்று சொல்லக்கூடிய தோல் அல்லாத காலணிகள் உற்பத்திச் செய்யக்கூடிய தொழில்கள், Electronic clusters அல்லது மென்பொருள் துறை (Software) இவ்வாறான தொழில்களில் பணியாற்றக்கூடியவர்கள், அவர்கள் வேலை பார்க்கும் சூழலுக்கு ஏற்ற வகையில், அங்கு பணியாற்றுபவர்கள் விரும்பினால், இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்ளலாம்.

இதனால், வாரத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த வேலை மணி நேரங்கள் என்பது மாறாது. இந்த மசோதாவின்படி வேலை செய்பவர்கள், 4 நாட்கள் வேலை செய்துவிட்டு 3 நாட்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். அந்நாட்களில் வேறு பணிகளையும் அவர்கள் பார்க்கலாம்.

இன்றையச் சூழலில் மாறியிருக்கின்ற Working Condition-ல், இந்த நெகிழ்வுத்தன்மை அவசியமான ஒன்றாக இருக்கிறது. இந்த மசோதா எந்த தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் என்பது குறித்த கொள்கைகள் அரசால் வகுக்கப்பட்டு அதன் மூலம் தெரிவிக்கப்படும். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த வாய்ப்பை தன்னார்வமாக யார் விரும்புகிறார்களோ, அதை தேர்வு செய்யும் உரிமை வழங்கப்படும்.

ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்ற சட்டங்களை மாற்றுவதாக இது அமையாது. இதை நடைமுறைப்படுத்தும்போது, எந்த இடத்தில் பணியாற்றுகின்றனர், அந்த தொழிலின் வேலை சூழல் என்ன என்பது குறித்து பார்க்கப்படும். உதாரணத்துக்கு, பொறியியல் சார்ந்த தொழிற்சாலை தளத்துக்கும், எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை தளத்துக்கும் மிகப் பெரிய அளவில் வித்தியாசங்கள் இருக்கிறது. பணியாளர்கள் வேலை பார்க்கும் தளத்திற்கு இடையே உள்ள தூரம் என்ன என்பது குறித்து பார்க்கப்படும்.

12 மணி நேரம் வேலை செய்கிறார்கள் என்றால், அதற்கேற்ற வசதிகள் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு செய்யப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் இருந்தால் மட்டுமே இதற்கான அனுமதி வழங்கப்படும். உடனடியாக இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்ற சூழ்நிலைகள் இல்லை" என்று அவர் கூறினார்.

## புதுக்கோட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய

# மாணவ, மாணவிகள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் சாதனை



புதுக்கோட்டை, ஏப்.22-

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் கடந்த 17.4.2023 மற்றும் 18.4.2023 ஆகிய நாட்களில் நடைபெற்ற தமிழ்நாடு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கிடையேயான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பால்பேட்மிண்டன் போட்டியில் சாம்பியன்ஷிப் பட்டத்தையும் பெண்களுக்கான தடைதாண்டும் ஓட்ட போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெண்களுக்கான தடகல போட்டியில் சேம்பியன் பட்டமும் பெற்று புதுக்கோட்டை அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும், திருச்சி மண்டலத்திற்கும் பெருமை சேர்த்தனர்.

வெற்றிபெற்ற வீரர், வீராங்கனைகளுக்கான பாராட்டு விழா நிலைய முதல்வர் தலைமையில் நடைபெற்றது அவர்களை நிலைய முதல்வர் குப்புராஜ் சாலை பாதுகாப்புவிழிப்புணர்வு சங்க செயலாளர் இப்ராகிம் பாபு, துணை தலைவர் சேட் என்ற அப்துல் ரகுமான் மற்றும் நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் நிலைய பயிற்சி அலுவலர்கள் இருபால் ஆசிரியப் பெருமக்கள் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர் நிகழ்வை உடற்பயிற்சி அலுவலர் கதிரேசன் மற்றும் நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் ஜோதிமணி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# தேர்தல் ஆணையம் அங்கிகாரம் பெற்றதை கொண்டாடும் வகையில் செம்பனார்கோயில் அதிமுக சார்பில் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



மயிலாடுதுறை, ஏப். 22 -

தேர்தல் ஆணையம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு இரட்டை இலை சின்னத்தை வழங்கியதற்கு நன்றிகள் தெரிவிக்கும் விதமாக மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியம் சார்பில் சங்கரன்பந்தல் கடைவீதியில் ஒன்றிய செயலாளர் வி.ஜி. கண்ணன் தலைமையில் அதிமுகவினர் பட்டாசுகள் வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

இதில் அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் சாமி, மாவட்ட அம்மா பேரவை தலைவர் ஆர்.பி.கண்ணன், மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் முரளி, மாவட்ட பிரதிநிதிகள் மணி, செல்வம் மாணவரணி ஒன்றிய செயலாளர் விஜய், எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் சேகர், ஒன்றிய இளைஞர் அணி இணை செயலாளர் முருகன், அரசூர் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரசேகர் மற்றும் அதிமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பழைய வண்ணாரப்பேட்டையில் பட்டப்பகலில் ரவுடி வெட்டி படுகொலை: தப்பிச் சென்ற மர்ம கும்பலுக்கு போலீசார் வலை வீச்சு



சென்னை, ஏப். 22 -

பழைய வண்ணாரப்பேட்டை, ஆரணி ரங்கன் தெருவை சேர்ந்த முன்னாள் ரவுடியான குமார் என்கின்ற கருப்பு குமார் தனது நண்பர்களுடன் பேசி கொண்டு இருந்த போது இரண்டு இருசக்கர வாகனத்தில் வந்த 6 பேர் கொண்ட மர்ம கும்பல் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து குமாரை அரிவாளால் வெட்டி விட்டு தப்பியோடியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின்பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்து கிடந்த குமாரை மீட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி குமார் உயிரிழந்தார்.

இது குறித்து கொருக்குப்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். பழைய வண்ணாரப்பேட்டையில் பட்டப்பகலில் முன்னாள் ரவுடியை கொலை செய்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# சாலை அமைத்து தரக்கோரி பொதுமக்கள் தொடர் காத்திருப்பு போராட்டம் : ஆட்சியர் உறுதியளித்தால் வாபஸ்





சீர்காழி, ஏப். 22 -

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அடுத்த கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சோதியக்குடி ஊராட்சி மன்றம் எதிரே பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கையான சாலை அமைத்து தராததை கண்டித்து ஊராட்சி மன்றம் அலுவலகம் எதிரே பொதுமக்கள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தூர் முதல் மாதிரவேலூர் வரையுள்ள சாலை கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பழுதான சாலையை சீரமைத்து தரக்கோரி பல்வேறு போராட்டங்கள் நடத்தி ஆறு மாதத்திற்கு முன்பாக ரூ.7 கோடியே 22 லட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் இதுவரை தங்கள் கிராமத்தில் தொடங்காத காரணத்தால் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்கள் மற்றும் மருத்துவமனை, வேலைக்கு செல்லும் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

அதிகாரிகள் மெத்தன போக்கோடு செயல்படுவதாகவும் குற்றம்சாட்டினர். மேலும் இருசக்கர வாகனங்களில் செல்வோர் சாலையில் விழுந்து காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையும் தொடர்கிறது. எனவே சாலை பணியினை விரைவாகவும், தரமாகவும் செய்து தரக்கோரி பாடல் பாடி கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். வஜ்ரா வாகனம் மற்றும் அதிக அளவில் போலீசார் குவிக்கப்பட்டதால் பரபரப்பான சூழல் நிலவியது. கொள்ளிடம் வட்டார வளர்ச்சி அலுவலர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். மாவட்ட ஆட்சியர் அல்லது கோட்டாட்சியர் நேரில் வந்து உறுதியளித்தால் மட்டுமே காத்திருப்பு போராட்டத்தை கைவிடுவதாக கூறி காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்,

இதனை தொடர்ந்து சீர்காழி வட்டாட்சியர் செந்தில்குமார் பேச்சுவார்தையில் ஈடுபட்டு விரையில் சாலை பணிகள் நடைபெற உரிய தீர்வு காண்பதாக உறுதியளித்ததின் பேரில் பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

# தென்காசியில் ஈபிள் டவர் பொருட்காட்சி மாவட்டச் செயலாளர் சிவ. பத்மநாதன் திறந்து வைத்தார்



தென்காசி, ஏப்.22-

குற்றாலம் பொதிகை என்டர்டெயின்மென்ட் நிறுவனம் சார்பில் தென்காசி இசக்கி மஹால் மைதானத்தில் ஈபிள் டவர் பொருட்காட்சி அமைக்கப் பட்டுள்ளது. பொருட்காட்சியை தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் சிவ. பத்மநாதன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

பின்னர் பொருட்காட்சி வளாகத்தில் உள்ள இயந்திர விலங்குகள் மற்றும் ராட்சத ராட்டினங்களை பார்வையிட்டார், இப்பொருட்காட்சி ஏப்ரல் 20 ஆம் தேதி தொடங்கி மே 31ம் தேதி வரை நடைபெறுகிறது. தினம்தோறும் மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை பொருட்காட்சி நடைபெறுகிறது. இப்பொருட்காட்சி வளாகத்தில் மிகப் பிரம்மாண்டமான ஈபிள் டவர் நுழைவாயில் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ராட்சத கொரில்லா, யானை, ஒட்டகச்சிவிங்கி, டைனோசர் ,மான், காட்டெருமை ஆகிய இயந்திர மிருகங்கள் தத்ரூபமாக வடிவமைக்கப் பட்டுள்ளது. மேலும் ராட்சத ராட்டினங்கள், வண்ண மீன் கண்காட்சி ,செல்பி பாயிண்ட், பனி உலகம், பேய் வீடு, மேஜிக் ஷோ மற்றும் வெளிநாட்டு பறவைகளின் சாகசங்கள் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு அழகுசுந்தரம் தலைமை வகித்தார், குற்றாலம் பேரூராட்சி கவுன்சிலர்கள் குமார் பாண்டியன், கிருஷ்ணராஜா, மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதயகிருஷ்ணன், திமுக பிரமுகர் ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் திவான் ஒலி, நகர செயலாளர் சாதிர், வழக்கறிஞர் வேலுச்சாமி ,பேரூர் திமுக செயலாளர்கள் சுடலை, சங்கர் என்ற குட்டி, முத்தையா, பண்டாரம், பொதுக்குழு உறுப்பினர் சாமித்துரை , ஜீவானந்தம், ஆனந்தன் சுரேஷ், செல்வம் மற்றும் திமுக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர், முடிவில் கனிராஜா நன்றி கூறினார்.



தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் மூலம் தீ தொண்டு வாரம் பாதுகாப்பு குறித்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் சைக்கிள் பேரணியை மதுரை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள தல்லாக்குளம் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தில் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அனீஷ் சேகர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.



காரைக்கால் பண்டித ஜவர்ஹால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் Jeux d Agri otaim. என்ற பெயரில் தமிழ்நாட்டில் உள்ள வேளாண் கல்லூரிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் கடந்த 18, 19, ஆகிய இரண்டு நாட்கள் நடத்தப்பட்டன. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 கல்லூரிகளும் காரைக்காலில் உள்ள வேளாண் கல்லூரியும் பங்கு பெற்றன. இந்த போட்டியில் ஆடவர் மற்றும் மாளிர்க்கான கைபந்தாட்ட போட்டி மற்றும் பூப்பந்தாட்ட போட்டி உள்ளிட்ட போட்டிகள் கடந்த இரண்டு நாட்களாக நடத்தப்பட்டன. இப்போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா பண்டிகை ஜவஹர்லால் நேரு வேளாண் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் த. குலோத்துங்கன் தலைமையேற்று விழாவை நடத்தி வைத்தார். இந்நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி ஆட்சியர் பேசுகையில் வெற்றி என்ற ஒரே இலக்கை நோக்கி மாணவர்கள் பயணிக்க வேண்டும் என்றும் பல்வேறு இடையூறுகளை கருத்தில் கொள்ளாமல் ஒரு மனதாக போராடினால் வெற்றி நிச்சயம் என்றும் மாணவர்கள் மத்தியில் பேசினார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் புஷ்பராஜ் உடற்கல்வி இணை பேராசிரியர் ஜெயசிவராஜன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து மற்றும் எச்.ஆர்.ஸ்கொயர் எல்.எல்.பி.யும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குப்பைகளை சேகரிக்கும் மின் மோட்டார் பொருத்திய இயந்திர வண்டியை போக்குவரத்து அமைச்சர் சந்திர பிரியங்கா, துவக்கி வைத்தார். இதன் மூலம் நெடுங்காடு பகுதி முழுவதும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வீடு தோறும் தனித்தனியாக சேகரிக்கப்படும் மேலும் இந்நிகழ்வில் துறையின் அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் பேசிய அமைச்சர் பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு மக்கும் குப்பை மக்காத குப்பை என்று தரம் பிரித்து அளிக்கும்படியும் நெடுங்காடு பகுதியை சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறும் அமைச்சர் பொதுமக்களை கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் பாலன் மற்றும் அரசு அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



மயிலாடுதுறையில் உள்ள வைத்தீஸ்வரன் கோவிலுக்கு புதுக்கோட்டை டவுன் மச்சுவாடியில் இருந்து மாட்டு வண்டி மற்றும் நடைபயணமாக பாதயாத்திரை சென்ற பக்தர்களுக்கு திராட்சை பழங்களை வழங்கி வழி அனுப்பி வைத்த திமுக மூன்றாவது வார்டு நகர் மன்ற உறுப்பினர் கார்த்திகைசெல்வி மற்றும் திமுக நிர்வாகி புதுநகர் குமார் உள்ளிட்டோர்.



புதுச்சேரி அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பாக கர்மவீரர் காமராஜர் மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 9-ஆம் வகுப்பு பயிலும் மானவ மாணவிகளுக்கு முதல்வரின் அறிவிக்கப்பட்ட இலவச சைக்கிள்களை நேற்று போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையிலும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முன்னிலையிலும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச சைக்கிள்களை வழங்கி சிறப்பித்தார்கள். நெடுங்காட்டில் அமைந்துள்ள பண்டித ஜவஹர்லால் நேரு அரசு மேல் நிலைப் பள்ளியில் 55 சைக்கிள்களும் கோட்டுச்சேரியில் அமைந்துள்ள வி.ஓ.சி.அரசு மேல்நிலைப் பள்ளியில் 52-சைக்கிள்களும் வரிச்சக்குடியில் அமைந்துள்ள அரசு உயர் நிலைப் பள்ளியில் 14 சைக்கிள்களும் ஆகமொத்தம் நேற்று 121 சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மேல்நிலைக்கல்வி துணை இயக்குநர் ராஜேஸ்வரி, முதன்மை கல்வி அதிகாரி இராஜசேகரன் மற்றும் அந்தந்த பள்ளியின் துனை முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உடனிருந்தனர். காரைக்கால் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெரும் 34 பள்ளிகளில் 9-ஆம் வகுப்பு படிக்கும் 1976 மாணவ மாணவிகளுக்கு இந்த இலவச சைக்கிள் வழங்கப்படுகிறது.

புதுவை அரசு வணிகத்திருவிழாவில்

# வெற்றி பெற்றவர்களுக்கு காரைக்காலில் முதல்வர் ரங்கசாமி பரிசு வழங்கினார்





காரைக்கால்,ஏப்,22

புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் 2023- ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை நடைபெற்ற வணிகத்திருவிழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்விற்கு முதல்வர் என்.ரங்கசாமி தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் இலட்சுமி நாராயணன், போக்குவரத்து துறை அமைச்சர் த சந்திர பிரியங்கா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.எச். நாஜீம், சிவா, நாகதியாகராஜன் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் மற்றும் வணிகர் சங்க நிர்வாகிகள் முக்கிய பிரமுகர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பேசிய முதல்வர், வணிகர் சங்கம் மற்றும் சுற்றுலாத்துறையும் இணைந்து வணிகத் திருவிழாவை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார்கள் என்றும் காரைக்காலுக்கு அதிக வளர்ச்சி அளிப்பதுதான் எனது அரசின் நோக்கம் என்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் காரைக்காலுக்கு கேட்கும் அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் இந்த ஆண்டு துவக்கத்தில் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றும் இதை அனைத்து தரப்பு மக்களும் பாராட்டு தெரிவித்தார்கள் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பம்பர் பரிசாக 75 சவரன் தங்க நாணயம் முதல் பரிசாகவும் மாருதி ஆல்டோ கார் 9 நபர்களுக்கு இரண்டாம் பரிசாகவும் மற்றும் பல்வேறு பரிசுகள் இந்நிகழ்வில் முதல்வரால் வழங்கப்பட்டன.

# சீரான மின்சாரம் வழங்க கோரி கிராம மக்கள் சாலை மறியல் போராட்டம்



*திருவள்ளூர், ஏப். 22 -*

*திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கன்னிகைப்பேர் ஊராட்சியில் உள்ள பெரிய காலனியில் விநாயகர் கோவில் தெரு மற்றும் பெருமாள் கோவில் தெரு உள்ளிட்ட பகுதியில் சுமார் 500 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருகிறது. மேலும் குறைந்த அழுத்த மின்சார சப்ளை நடைபெறுவதால் அடிக்கடி மின்சாதன பொருட்கள் பழுதடைந்து பொதுமக்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.*

*இது குறித்து இப்பகுதி மக்கள் ஊராட்சி மன்ற தலைவர் காயத்ரி உதயகுமார், துணைத் தலைவர் மேனகா பிரேம் குமார் மற்றும் வார்டு உறுப்பினர்களிடம் முறையிட்டனர். இந்நிலையில் சுமார் ரூ.3 லட்சம் செலவில் விநாயகர் கோவில் தெரு முனையில் டிரான்ஸ்பார்மர் ஒன்று அமைக்கும் பணி கடந்த பத்து நாட்களாக நடைபெற்றது. நேற்று மதியம் மேற்கண்ட இரண்டு தெருக்களில் உள்ள மின் இணைப்புகளை டிரான்ஸ்பார்மரில் இணைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.*

*அப்பொழுது மூன்று நபர்கள் வந்து டிரான்ஸ்பார்மர் இங்கு அமைக்க கூடாது. மின்வாரிய ஊழியர்கள் யாரும் பணி செய்யக்கூடாது என்று தகாதவார்த்தைகளால் பேசி அவர்களை பணி செய்ய விடாமல் தடுத்தனர். இதனால் அப்பணி பாதியில் நின்றது.*

*இதுகுறித்து தகவல் அறிந்த மேற்கண்ட இரண்டு தெருக்களில் வசித்து வரும் ஏராளமான பொதுமக்கள் திரண்டு வந்து மேற்கண்ட மூன்று நபர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு பிரச்சனை ஏற்பட்டதால் மின்வாரிய ஊழியர்கள் பயந்து போய் பணியை பாதியிலேயே நிறுத்திவிட்டு சென்றுவிட்டனர். இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் உடனடியாக டிரான்ஸ்பார்மர் பணியை முடித்து சீரான மின்சாரம் வழங்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தங்களது கோரிக்கையை முன்வைத்து கன்னிகைப்பேர் சர்ச் எதிரே திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சென்னை, பெரியபாளையம் நெடுஞ்சாலையில் ஏராளமான வாகனங்கள் சாலையின் இருபுறமும் ஸ்தம்பித்து நின்றது.*

*தகவல் அறிந்து பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தார். போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை மேற்கொண்டார். மேலும், இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். இதனை ஏற்று அப்பகுதி மக்கள் அமைதியாக கலைந்து சென்றனர். இந்த சாலை மறியல் போராட்டத்தால் இப்பகுதியில் சுமார் 2 மணிநேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு பதட்டமும், பரபரப்பும் நிலவியது.*

# வடசென்னையில் முதல் முறையாக எலக்ட்ரிக் இருசக்கர வாகன ஷோரூம். சென்னை மாநகர மேயர் பிரியா தொடங்கி வைத்தார்



ராயபுரம், ஏப். 22 -

சென்னை இராயபுரத்தில் உள்ள எஸ்.கே.மோட்டார் ஆம்பியர் நிறுவனத்தின் எலக்ட்ரிக் இருசக்கர வாகனத்தின் விற்பனையகம் துவங்கப்பட்டது. ராயபுரம் எம்.எஸ்.கோவில் தெரு பகுதியில் துவங்கப்பட்ட எலக்ட்ரிக் இருசக்கர வாகன விற்பனையகத்தை சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். பின்னர் குத்துவிளக்கு ஏற்றினார். பின்னர் எலக்ட்ரிக் இருசக்கர வாகனத்தை அறிமுகம் செய்த பின்னர் வாடிக்கையாளருக்கு இருசக்கர வாகனத்தின் சாவியை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஐடீரிம் மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், கே.பி.சங்கர், ஆர்.டி.சேகர், மாநகராட்சி நகர அமைப்பு குழு தலைவர் இளைய அருணா, இராயபுரம் பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், 52 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கீதா சுரேஷ், கோவிந்தசாமி, வேளாங்கண்ணி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதிக்கு தரங்கம்பாடி பேரூராட்சி பொதுமக்கள் மற்றும் பேருந்து பயணிகள் பாராட்டு



மயிலாடுதுறை, ஏப். 22 -

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதியிடம் கடந்த சில தினங்களுக்கு முன்பு தரங்கம்பாடி பேரூராட்சி பொதுமக்கள் மற்றும் பொறையார் பேருந்து பயணிகள் கிழக்கு கடற்கரை சாலையில் செல்லக்கூடிய அனைத்து பேருந்துகளும் பொறையார் பேருந்து நிலையம் வந்து செல்வதற்கு ஆவண செய்யுமாறு கேட்டிருந்தனர்.

அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியாளர் மகாபாரதி அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் கோட்டம், நாகப்பட்டினம் மண்டலம் மூலம் இயக்கப்படும் அனைத்து பேருந்துகளும் பொறையார் பேருந்து நிலையம் வந்து சென்று பயணிகளை ஏற்றி, இறக்கி விட்டுத்தான் செல்ல வேண்டும் என்று கும்பகோணம் கோட்டம் மேலாண் இயக்குனருக்கு உத்தரவிட்டிருந்தார்.

அதன் பெயரில் நாகை மண்டல பொது மேலாளர், பொது மேலாளர் (வணிகம்) ஆகியோர் நடவடிக்கையின்படி பொறையார் ராஜிவ்புரம் சந்திப்பில் கிழக்கு கடற்கரை சாலையில் செல்லக்கூடிய சென்னை, பாண்டிச்சேரி, கடலூர், சிதம்பரம் மார்க்க பேருந்துகள் மற்றும் நாகப்பட்டினம், ராமநாதபுரம் மார்க்கம் செல்லக்கூடிய பேருந்துகள் அனைத்தும் பொறையார் பேருந்து நிலையம் சென்று வருவதால் பேருந்து பயணிகள் மிகவும் சந்தோஷம் அடைந்துள்ளனர்.

இதற்காக உடனடியாக நடவடிக்கை எடுத்த மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதிக்கு தரங்கம்பாடி பேரூராட்சி பொதுமக்கள் மற்றும் பேருந்து பயணிகள் நன்றிகள் மற்றும் பாராட்டு தெரிவித்து, பதாகைகள் வைத்து வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.

# ஆருத்ரா கோல்டு நிதி நிறுவன மோசடி வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிகை முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்

சென்னை , ஏப்.22-

ஆருத்ரா கோல்டு நிதி நிறுவன மோசடி வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட இருப்பதாக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.



சட்டப்பேரவையில் காவல் துறை, தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் தளி ராமச்சந்திரன், "ஆணவப் படுகொலைகள் நிகழாமல் தடுக்க நடப்பு சட்டப்பேரவை கூட்டத்திலேயே சட்டம் இயற்ற வேண்டும். ஆருத்ரா கோல்டு நிதி நிறுவன மோசடிகள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில் அளித்துப் பேசியதாவது: ஆருத்ரா கோல்டு டிரேடிங் நிதி நிறுவனம் கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. பொதுமக்களின் முதலீடுகளுக்கு மாதம் 25 சதவீதம், 30 சதவீதம் வட்டி என கவர்ச்சிகரமான அறிவிப்பை வெளியிட்டு, 2020 செப்டம்பர் முதல் ஒரு லட்சம் முதலீட்டாளர்களுக்கு சுமார் ரூ.2,438 கோடி முதலீடு மற்றும் வட்டியை திருப்பித் தராமல் ஏமாற்றியுள்ளதாக புகார்கள் வந்துள்ளன.

அந்த புகார்கள் மீது திமுக ஆட்சி வந்த பின்னர்தான், பொருளாதார குற்றப்பிரிவு வழக்குகள் பதிவுசெய்து 22 பேர் எதிரிகளாக சேர்க்கப்பட்டனர். அவர்களில் இயக்குநர்கள், ஏஜென்ட்கள் என 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாட்டுக்கு தப்பிச்சென்ற இயக்குநர் ராஜசேகர், உஷா ஆகியோர் மீது ரெட் கார்னர் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. ரொக்கம் மற்றும் வங்கிக்கணக்கில் இருந்த பணம் ரூ.96 கோடியும், 93 அசையா சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன. இவ்வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

இதேபோல், மோசடியில் ஈடுபட்ட வேறு சில நிதி நிறுவனங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்களின் சொத்துகள், வங்கிக்கணக்குகள் முடக்கப்பட்டு முதலீட்டாளர்களுக்கு பணத்தை திருப்பிக்கொடுக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்த உத்தரவிட்டுள்ளேன். நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யும் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அனைத்து நிதி நிறுவனங்களையும் கண்காணிக்க வேண்டும் என காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு முதல்வர் பேசினார்.



தென்காசி மாவட்டம் சொக்கம்பட்டி அஇஅதிமுக பொதுச்செயலாளராக எடப்பாடிகே. பழனிச்சாமியை இந்திய தேர்தல் ஆணையம் அங்கீகரித்ததை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்டம் கடையநல்லூர் வடக்கு ஒன்றியத்தின் சார்பில் ஒன்றிய செயலாளர் வசந்தம் முத்துப்பாண்டியன் தலைமையில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட பிரதிநிதி பெருமையாபாண்டியன், ஊராட்சி அதிமுக செயலாளர் சந்தன பாண்டியன், மாவட்ட பிரதிநிதி முருகன், பாசறை செயலாளர் மகேஷ் குமார், இசக்கி, அசோக்குமார், முருகன், வெள்ளத்துரை மற்றும் அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் தமுமுக சார்பாக 29 ஆம் ஆண்டு ரமலான் பித்ரா அரிசி வழங்கும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஜமாத் தலைவர் ச. முகமதுசருக்,செயலாளர் அப்துல் லத்தீப்,தமுமுக மாவட்ட துணைசெயலாளர் அக்பர் அலி, மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் துணைச் செயலாளர் அபுபக்கர், தமுமுக நகர தலைவர் சையது முகமது ஆகியோர் கலந்துகொண்டு நூறுக்கும் மேற்பட்டவர்களுக்கு ரமலான் பித்ரா அரிசி வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தமுமுக உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் ஜமாத் உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் லந்து கொண்டனர்.

## காவேரி-வைகை-குண்டாறு மாவட்ட அளவிலான

# தனிநபர் பேச்சுவார்த்தை குழுக் கூட்டம் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



புதுக்கோட்டை , ஏப்.22-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், காவேரி-வைகை-குண்டாறு இணைப்புக்கால்வாய் திட்டத்திற்காகநிலஎடுப்பு செய்யப்படவுள்ள நிலங்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக தனிநபர் பேச்சுவார்த்தை மூலம்நிலம்கையகப்படுத்த அமைக்கப்பட்ட மாவட்ட தனிநபர் பேச்சுவார்த்தை குழு (பத்தாம் கட்டம்) கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு தலைமையில் நேற்று நடைபெற்றது.

காவேரி - வைகை - குண்டாறு இணைப்புக்கால்வாய் திட்டத்திற்காக புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தாலுகா குன்னத்தூர், குளத்தூர் தாலுகா புலியூர், மண்டையூர், செட்டிபட்டி, பூங்குடி, சீமானூர், வாலியம்பட்டி மற்றும் வத்தனாகுறிச்சி ஆகிய 8 கிராமங்களில் தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நிலம் கையகம் செய்யப்படவுள்ள 92 பட்டாதாரர்களின் 91 புலஎண்களில் மொத்த கையக பரப்பு 11.71.23 ஹெக்டேர் நிலத்திற்கு மற்றும் மரங்கள், கட்டிடங்கள், கிணறுகள் நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவது தொடர்பாக, மாவட்ட அளவிலான தனிநபர் பேச்சுவார்த்தை குழு கூட்டம் (பத்தாம் கட்டம்) நேற்றையதினம் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு தலைமையில் நடைபெற்றது.

மேலும் காவேரி-வைகை-குண்டாறு இணைப்புக்கால்வாய் திட்டப்பணிகளைவிரைந்து மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்குமாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (காவேரி - வைகை - குண்டாறு) ரம்யாதேவி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்தில் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம்

அறந்தாங்கி, ஏப்.22-

அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்தில் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம், 500க்கும் மேற்பட்ட மாற்றுத்திறானிகள் பங்கேற்றனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்தில் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம் நேற்று நடைபெற்றது. இந்த முகாமில் சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற நிலையில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான அடையாள அட்டை, யுபிஐ கார்டு மற்றும் மனுக்களும் பதிவு செய்யப்பட்டது.

தேர்வு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு தையல் இயந்திரம் கோட்டாட்சியர் சொர்ணராஜ் தலைமையில் வழங்கப்பட்டது, மேலும் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு முகாமில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் சமூக நல பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர்கள் அறந்தாங்கி பரணி, ஆவுடையார்கோவில் கவிதா, மணமேல்குடி நாகநாதன் மற்றும் அறந்தாங்கி துணை வட்டாட்சியர் பாலமுருகன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உள்ளிட்ட அத்துறையைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை நெல்லுமண்டிதெரு ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லரியில் அட்சய திருதியை முன்னிட்டு நகைகளை முன்பதிவு செய்த வாடிக்கையாளர்களுக்கு உரிமையாளர் வெங்கடேஷ் நகைகளை வழங்கி வாழ்த்திய போது எடுத்த படம்.

## புதுக்கோட்டை மாவட்ட

# மதிமுக மாவட்ட செயலாளராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார் எஸ்.கே.கலியமூர்த்தி



புதுக்கோட்டை , ஏப்.22-

தமிழகம் முழுவதும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோ மற்றும் துறை வைகோ ஆகியோர் தமிழகம் முழுவதும் மதிமுக சார்பில் உட்கட்சி தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும்என அறிவிப்பை வெளியிட்டனர்.

அதன் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் ஐந்தாவது அமைப்பு தேர்தல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் கிளை கழகம், ஒன்றிய கழகம், நகர கழகம் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளுக்கு தேர்தல் மூலம் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்தனர். மேலும் மாவட்டச் செயலாளர் மற்றும் அவை தலைவர் பதவிகளுக்கு தேர்தல் நடத்தப்படாமல் இருந்த நிலையில் புதுக்கோட்டை மாவட்ட கழக செயலாளராக யாரும் போட்டியிடுவதற்கு விருப்புமனுவழங்காததால் போட்டியின்றி புதுக்கோட்டை மாவட்டச் செயலாளராக எஸ்.கே.கலியமூர்த்தி தேர்வு செய்யப்பட்டார்.

அதேபோல் அவைத்தலைவராக ஆரோக்கியசாமி, பொருளாளராக ராஜா ஆதிமூலம், துணைச் செயலாளராக முத்தையா, சுப்பையா, செல்வராணி, மதியழகன் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் என பல்வேறு பதவிகளுக்கு நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

## கந்தர்வக்கோட்டை ஒன்றிய தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில்

# உலக புவி தினத்தை மரக்கன்றுகள் நட்டு விழிப்புணர்வு கொண்டாட்டம்

கந்தர்வகோட்டை, ஏப். 22-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை ஒன்றியம் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் அரசு உயர்நிலைப்பள்ளி வெள்ளாள விடுதியில் உலக புவி தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் பொறுப்பு முத்துராமன் தலைமை வகித்தார், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் மு.முத்துக்குமார் வரவேற்றார், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்ட இணைச் செயலாளர் துரையரசன் மற்றும் கந்தர்வக்கோட்டை வட்டாரத் தலைவர் ரகமதுல்லா ஆகியோர் கலந்து கொண்டு உலக புவி தினம் குறித்து பேசியதாவது

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 22-ந் தேதி சுற்றுசூழல் பாதுகாப்பிற்கான ஆதரவை காட்டுவதற்காக உலகம் முழுவதும் உலக புவி தினம் அனுசரிக்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டு புவி தினத்தின் கரும்பொருள் எங்கள் கிரகத்தில் முதலீடு செய்யுங்கள் என்பதாகும், புவி தினம் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது, இது பூமி ஒரு சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் வளிமண்டலத்தை வழங்குகிறது என்பதை மக்களுக்கு நினைவூட்டுகிறது. மேலும் அதை நம்மை கவனித்துக் கொள்வது போல் நாம் அதை கவனித்துக் கொள்வது முக்கியம் இந்த நாளின் முக்கிய நோக்கம் கிரகம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அதன் நிலையை மேம்படுத்த நாம் என்ன செய்ய முடியும் என்பது குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும்.

எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பது, கார்பன் வெளியேற்றும் வாகனத்திற்கு பதிலாக மின்சார வாகனங்கள், சைக்கிள் பயன்படுத்துவது, பிளாஸ்டிக்கிற்கு பதிலாக துணிப்பைகளை உபயோகிப்பது, மரங்களை நடுவது, மறு சுழற்சி செய்த பொருட்களை பயன்படுத்துவது போன்ற செயல்பாடுகள் மூலம் இயற்கையை பாதுகாத்திட முடியும். பசுமையான, வளமானதாக இந்த பூமியை மாற்ற அரசாங்கமும், பொதுமக்களும் செயல்பட வேண்டியது அவசியமான ஒன்றாகும். எனவே இந்த நாளில், உலகெங்கிலும் உள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்களோடு நாமும் ஒன்றிணைந்து, இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்க முயற்சிப்போம். இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு நபரும் நமது பூமியின் இயற்கை வளங்களை நம்முடைய சந்ததியினருக்கு அளிக்க இந்த நாளில் உறுதியேற்போம்.

# உலக புத்தக தினத்தையொட்டி கல்லுக்குளம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் "தாய்மை நூலகம்" திறப்பு



தஞ்சை , ஏப். 22 -

உலக புத்தக தினத்தை முன்னிட்டு தஞ்சாவூர் மாநகராட்சி சார்பில் கல்லுக்குளம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் "தாய்மை நூலகம்" நேற்று திறக்கப்பட்டது.

இந்த தாய்மை நூலகத்தை தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன் திறந்து வைத்தார். துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, மாநகராட்சி ஆணையர் க. சரவணகுமார் மற்றும் மாநகர் நல அலுவலர் டாக்டர் வீ.சி. சுபாஷ் காந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாமன்ற உறுப்பினர்கள் கண்ணுக்கினியாள், வைஜெயந்திமாலா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அனைவரிடத்திலும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்கபடுத்தும் விதமாக உலக புத்தக தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல்23 ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை மையப்படுத்தி தஞ்சாவூர் மாநகராட்சி, கல்லுக்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிசோதனை மற்றும் சிகிச்சைகாக வரும் கர்ப்பிணிதாய்மார்கள் மற்றும் பிரசவித்த தாய்மார்கள் தாங்கள் மருத்துவமனையில் இருக்கும் நேரத்தில் தங்களுக்கு பிடித்த புத்தகத்தினை தேர்ந்தெடுத்து படிக்கும் வகையில் கதை, இலக்கியம், வரலாறு, மொழி, சமூக சீர்திருத்தம், தன்னம்பிக்கை உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வெளிவந்துள்ள புத்தகங்கள் தாய்மை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த தாய்மை நூலகத்தை தொடங்குவதற்காக மேயர் சண். இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, மாநகராட்சி ஆணையர் சரவணகுமார் ஆகியோர் தங்களிடமிருந்த புத்தகங்களை தாய்மை நூலகத்திற்கு கொடையாக வழங்கினார்கள். இதே போல இந்த தாய்மை நூலகத்திற்கு புத்தங்களை நன்கொடையாக கொடுக்க விரும்புவர்கள் கல்லுக்குளம் சுகாதார நிலைய மருத்துவ குழுனரிடம் வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற கர்ப்பிணிதாய்மார்கள் தங்களுக்கு விருப்பமான புத்தங்களை தாய்மை நூலகத்திலிருந்து எடுத்து படித்தார்கள். மேலும் மருத்துவமனையில் பிரசவித்த தாய்மார்களும் தாய்மை நூலகத்தில் புத்தகங்களை ஆர்வமுடன் எடுத்து படித்தனர். இந்நிகழ்வில் முன்னதாக மருத்துவர் முத்துகுமார் வரவேற்றார். முடிவில் சுகாதார ஆய்வாளர் ஜோசப் சேவியர் நன்றி கூறினார்.


**கனம் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நீதிபதி அவர்கள் புதுக்கோட்டை**

**ந.க. எண்.அ6/8200/2022**

R.பாப்பாத்தி, W/O ராஜா, எண்-2/139, அம்மையாண்டி, பேராவூரணி தாலுகா தஞ்சாவூர் மாவட்டம்-614804. மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர், புதுக்கோட்டை. எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் R.பாப்பாத்தி தனது தந்தை ம.பிச்சை என்பவர் கடந்த 16.07.2001ம் தேதியன்று புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மாங்கோட்டை ஊராட்சி, எண்-1/174 என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை அறியவும்.

**R.பாப்பாத்தி, மனுதாரர், தஞ்சாவூர்.**


# தென்காசி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தின விழா

தென்காசி, ஏப்.22-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உணவு பொருள் வழங்கல் துறை மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலம் தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினம் மற்றும் உலக நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகள் தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் துரை.இரவிச்சந்திரன், தலைமையில் நடைபெற்றது.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உணவு பொருள் வழங்கல் துறை மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலம் தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினம் மற்றும் உலக நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகள் தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் துரை.இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது, உலக நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது, இந்தியாவில் தேசிய நுகர்வோர் சட்டம் 1986 -ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் அனைத்து நுகர்வோரும் எல்லா விதமான பொருள்களின் தரத்தினை குறித்தும், பொருள்களின் தரத்தில் ஏதேனும் குறைபாடு இருந்தால் இந்த நுகர்வோர் சட்டம் மூலம் நிவாரணம் பெற்றுக்கொள்ளலாம், பள்ளிகளில் இருந்தே மாணவ, மாணவியர்கள் நுகர்வோர் சட்டத்தினை அறிந்துக்கொள்ளும் வகையில் நுகர்வோர் கிளப் ஆரம்பிக்கப்பட்டு நமது மாவட்டத்தில் சிறப்பாக இயங்கி வருகிறது. இந்த நுகர்வோர் கிளப் மூலம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. நுகர்வோருக்கு நுகர் பொருள் வாங்கும் இடத்தில் ஏதேனும் குறைப்பாடுகள் இருந்தாலும், பொருள்கள் வாங்கும் பொழுது அந்த பொருள்கள் காலவதியான தேதிகளில் விற்பனை செய்தாலும் நுகர்வோர் நீதிமன்றத்தின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசின் மூலம் பொதுமக்களுக்கு நுகர்வோரின் அடிப்படை உரிமைகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் நுகர் பொருள் சட்டத்தினை அறிந்து கொண்டு பயன்பெற வேண்டும். தொடர்ந்து உலக நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகள் தின விழாவினை முன்னிட்டு, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி ஆகிய போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கேடையம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் துரை. இரவிச்சந்திரன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சுதா, துணைப்பதிவாளர் (பொது விநியோக திட்டம்) திவ்யா,வட்டார நுகர்வோர் சுற்றுசூழல் பாதுகாப்பு சங்க செயலாளர் சுப்பிரமணியன், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் க.அரவிந், முதுநிலை மண்டல மேலாளர் ஆர்.ராஜேஷ்,உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ரா.ராமசுப்பிரமணியன் மற்றும் துறை அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.




# கர்நாடகா தேர்தலில் அதிமுக இபிஎஸ், ஓபிஎஸ் தரப்பில் தலா ஒருவர் போட்டி

# கள்ளக்குறிச்சி 3 பேர் கொலை வழக்கில் குற்றவாளிகளை அள்ளியது போலீஸ்





# 12 மணி நேர வேலை: யாருக்கெல்லாம் பொருந்தும்? அமைச்சர் விளக்கம்

சென்னை / புதுக்கோட்டை | 22.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

22.04.2023 சனி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

அ. இராகவன் , தமிழக நுண்கலை ஆய்வாளர், எழுத்தாளர் (பி.1902) (இ.1981)



சுப. வீரபாண்டியன் , தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர், தமிழறிஞர் (பி.1952)



ஜெயமோகன் , தமிழக எழுத்தாளர் (பி.1962)



## இன்றைய நினைவு நாள்

சாமிக்கண்ணு வின்சென்ட் , தமிழகத் திரைப்பட வெளியீட்டாளர், தயாரிப்பாளர், தொழிலதிபர் (பி.1883) (இ.1942)



எஸ். டி. சிவநாயகம் , இலங்கை பத்திரிகையாளர், எழுத்தாளர் (இ.2002)



கந்தர்வன் , தமிழக எழுத்தாளர், கவிஞர், தொழிற்சங்கவாதி (பி.1944) (இ.2004)



## புவி நாள்

## ரமலான் பண்டிகை